# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

பதிவெண் 5003

## XII - மொழிப்பாடம் - பகுதி - I - தமிழ்

கால அளவு : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

*அனைத்து வினாக்களுக்கும் விடையளி.* 14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் ________.
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. தமிழில் திணைப்பாகுபாடு எந்த அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
3. "உவா உற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார்" - யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) ராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
4. கடலின் பெரியது?
   அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
   இ) தினையளவு செய்த உதவி
5. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) தமிழ் அழகியல் | - | 1. பரலி சு.நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | - | 2. தி.சு.நடராசன் |
| இ) கிடை | - | 3. சிற்பி பாலசுப்பிரமணியம் |
| ஈ) உய்யும் வழி | - | 4. கி.ராஜநாராயணன் |

   அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
6. சுரதா நடத்திய கவிதை இதழ் ________.
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
7. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல் ________.
   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
8. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' - இக்கவிதையில் பயின்று வந்துள்ளது
   அ) பயன் படிமம் ஆ) வினைப் படிமம் இ) மெய்ப் படிமம் ஈ) உருப்படிமம்
9. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதனையே ________ என்கிறோம். அ) ஒலிப்பின்னல ஆ) கலை முழுமை இ) சொற்புலம் ஈ) தொடரியல் போக்குகள்
10. ஓதற்பிரிவிற்குரிய காலம் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுவது
    அ) 5 ஆண்டுகள் ஆ) 3 ஆண்டுகள் இ) 4 ஆண்டுகள் ஈ) 12 ஆண்டுகள்
11. தவறான இணையைக் கண்டறிக.
    அ) பகடு - எருது ஆ) செறு - வயல் இ) ஏமலி - குதிரை ஈ) கயல்-மீன்
12. புவிவெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று கூறிய அறிவியல் கருத்தாளர்
    அ) ஆனந்த் ஆ) டேவிட்கிங் இ) தாமஸ் பிட் ஈ) எலியேல்
13. 'தலைக்குளம்' என்ற சிறுகதையை எழுதிய ஆசிரியர்
    அ) உத்தமசோழன் ஆ) தோப்பில் முகமது மீரான்
    இ) பூமணி ஈ) சாந்தா தத்
14. உலக சுற்றுச்சூழல் நாளாக கொண்டாடப்படுவது
    அ) ஏப்ரல் 22 ஆ) மார்ச் 20 இ) ஜூன் 5 ஈ) மார்ச் 8

### பகுதி - II

***எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.*** 3 x 2 = 6

#### பிரிவு - 1

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழன் துணை வேண்டும் என்கிறார்?
16. கலி விழா, ஒலி விழா - விளக்கம் தருக.
17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.
18. 'உப்பங்கழி' - என்றால் என்ன?

#### பிரிவு - 2

***எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.*** 2 x 2 = 4

19. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?
20. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.
21. அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

#### பிரிவு - 3

***எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.*** 7 x 2 = 14

22. உவமைத் தொடர்களை சொற்றொடரில் அமைத்து எழுதுக:
    அச்சாணி இல்லாத தேர் போல
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    அலை, அளை, அழை



Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

24. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடராக்கு:
சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்
25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
ஆசிரியருக்கு கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக. ஐப்பசி அடமழையில் ஊருணி நிறைந்தது.
27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க: தாமரை
28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
வீட்டாண்ட வௌளயாண்ட கொயந்தைய அப்பா எங்க இஸ்துகினு போனாரு
29. புணர்ச்சி விதி தருக. அருங்கானம் *(அல்லது)* ஒருமையுடன்
30. தமிழாக்கம் தருக : அ) PASSPORT ஆ) VISA

## பகுதி - III

### பிரிவு - 1

***எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளி.*** **2 x 4 = 8**

31. இராமலிங்க அடிகள் கந்தவேலிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
32. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
33. 'மூன்றான காலம் போல ஒன்று' எவை? ஏன்? விளக்குக.
34. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

***எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளி.*** **2 x 4 = 8**

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
36. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். - விளக்குக.
37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
38. நீங்கள் ஆசிரியரானால், மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### பிரிவு - 3

***எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.*** **3 x 4 = 12**

39. பாடாண் திணையை சான்றுடன் விளக்குக.
40. நிரல் நிறையணி *(அல்லது)* ஏகதேச உருவக அணியைச் சான்று தந்து விளக்குக.
41. 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' - என்ற பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
42. ***இலக்கிய நயம் பாராட்டுக :*** *பிறப்பினால் எவர்க்கும் - உலகில்*
*பெருமை வாராதப்பா !*
*சிறப்பு வேண்டுமெனில் - நல்ல*
*செய்கை வேண்டுமப்பா !*
*நன்மை செய்பவரே - உலகம்*
*நாடும் மேற்குலத்தார் !*
*திண்மை செய்பவரே - அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார்.* - கவிமணி தேசிக விநாயகம்
43. தமிழாக்கம் தருக :
    1. Learning is a treasure that will follow its owner everywhere.
    2. A new language is a new life.
    3. If you want people to understand you, speak their language.
    4. Knowledge of languages is the doorway to wisdom.

## பகுதி - IV

***அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.*** **3 x 6 = 18**

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. *(அல்லது)*
ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.
45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)*
ஆ) பண்டைய காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையில் நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.
46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட சமூகப் பற்று, மொழிப் பற்று ஆகியவற்றை விளக்குக. *(அல்லது)*
ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - V

***குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.*** **(4 + 2 = 6)**

47. அ) "ஒருமையுடன் ..........." எனத் தொடங்கும் தெய்வமணி பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) "சினம்" - என முடியும் குறட்பாவை எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## தமிழ் ஒப்படைப்பு

### பகுதி - I

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் தொல்காப்பியம்
2. தமிழ் திணைப்பாகுபாடு பொருட்குறிப்பு அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
3. "உயா உற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார்" - இராமன், சுக்ரீவன்
4. கடலின் பெரியது? - பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி.
5. தமிழ் அழகியல் - தி.சு. நடராசன்
   நிலவுப்பூ - சிற்பி பாலசுப்பிரமணியம்
   கிடை - கி. ராஜநாராயணன்
   உய்யும் வழி - பரலி சு. நெல்லையப்பர்.
6. சரதா நடத்திய இதழ் - காவியம்
7. 'குழிமாற்று' - கணிதம்
8. 'காலை இளம் வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' - வினைப் படிமம்
9. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதையே ஒலிப்பின்னல் என்கிறோம்.
10. ஒதற்பிரிவிற்குரிய காலம் - 3 ஆண்டுகள்
11. ருமலை - குதிரை - தவறானது.
12. புவிவெப்பமடைதல் மனிதனே உருவாக்கியது என்று கூறியவர் டேவிட் கிங்.
13. 'தலைக்குளம்' - ஆசிரியர் தோப்பில் முகமது மீரான்
14. உலக சுற்றுச்சூழல் நாள் - ஜூன் 5.

Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி - II

### பிரிவு - I

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

* கதிரவன் மறைதல்
* சிவந்த வானம்
* உழைப்பாளர்களின் சிவந்த கரங்கள்
* தோள்களில் இருக்கும் முத்தான வியர்வை துளிகள்.

16. கலி, ஒலி விழா - விளக்குக.

கலி விழா - எழுச்சி விழா
ஒலி விழா - ஆரவார விழா.

18. 'உப்பங்கழி' என்றால் என்ன?

மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதிக்கு உப்பங்கழி எனப்பெயர்.

### பிரிவு - II

20. புக்கில், தன்மனை - விளக்குக.

புக்கில் - தற்காலிக தங்குமிடம்
தன்மனை - திருமணத்திற்கு பின்பு கணவனும், மனைவியும் தனியாக வாழுமிடம்.

21. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்குரிய நூல்கள் யாவை?

* நிகண்டு
* தண்டியலங்காரம்
* நன்னூல்
* நீதி நூல்கள்.
* காரிகை

Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பிரிவு - 3.

22. உவமைத் தொடர்களை சொற்றொடரில் அமைக்க.
ஆசிரியர் இல்லாத பள்ளி, அச்சாணி இல்லாத தேர் போல.

23. மயங்கொலிச் சொற்களை தொடரில் அமைக்க.
அலையைப் பார்க்க அலை சாதத்தோடு குழந்தையை அழைத்துச் சென்றேன்.

24. வேற்றுமை உருபைச் சேர்த்து தொடர் அமைக்க
சான்றோருக்கு மதிப்பு கொடுத்தால் வாழ்வில் உயரலாம்.

25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:-
ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்துகொண்டு, அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

26. பிழை நீக்கி எழுதுக:-
ஐப்பசி அடைமழையில் உலகுணி நிறைந்தது.

28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:-
வீட்டின் அருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கு அழைத்துக் கொண்டு போனார்.

30. கலைச்சொல்:-
அ.) Passport - கடவுச்சீட்டு
ஆ.) VISA - நுழைவு இசைவு.

Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி - III

### பிரிவு - I

31. இராமலிங்க அடிகள் கந்தவேலிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

* ஒரு நெறிப்பட்ட மனதோடு உன்னையே நினைக்கும் உத்தமர் உறவு வேண்டும் என்றும்,
* உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவார் உறவு வேண்டாம் என்று கூறினார்.

32. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

* சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்.
* சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அஃது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டு அழிக்கும்.

### பிரிவு - 2

34. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பவற்றைக் குறிப்பிடுக.

* கட்டடங்கள்
* மெட்ராஸ் ரெக்காட் ஆபீஸ்
* எழும்பூர் அருங்காட்சியகம்
* கன்னிமாரா நூலகம்
* புனித ஜார்ஜ் கோட்டை.

Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

36. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

* மொழி என்பது சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.
* கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.
* ஓசையும் பொருளும் இணைந்து கவிவடிவம் கொள்கிறது.
* இவற்றோடு சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன.

---

<u>பிரிவு - ௫</u>.

39. பாடாண் திணை விளக்குக:-

ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை ஆகும்.

சான்று:- வாயிலோயே! வாயிலோயே! புறநானூறு பாடல்

---

40. நிரல் நிறையணியை சான்றுடன் விளக்குக:-

சொல்லையும் பொருளையும் வரிசைப்பட நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி ஆகும்.

சான்று:-

குறள்:- அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

---

43. தமிழாக்கம் தருக:-

1. Learning is a treasure that will follow its owner everywhere.
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

2. A new language is a new life.
புதிய மொழியைக் கற்றுக் கொள்வது புதிய வாழ்க்கைக்குச் சமம்.

Scanned with OKEN Scanner

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

3. If you want people to understand you, speak their language.
உன்னை ஒருவன் புரிந்து கொள்ள விரும்பினால் அவனது மொழியில் பேசு.

4. Knowledge of languages is the doorway to wisdom.
மொழியைப் பற்றிய அறிவு ஞானத்தின் திறவுகோல்.

## பகுதி - IV

44. ஆ. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

1. "செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது".

* தான் ஒரு உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்தவனுக்கு மண்ணுலகமும் விண்ணுலகமும் கொடுத்தாலும் ஈடாகாது.

2. "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

* உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவைவிட மிகப் பெரியது.

3. "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லது அன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிட வேண்டும்.

Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

45. அ. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து:-

* நெகிழி மக்கும் தன்மையற்றதால் விளைநிலங்களைப் பாதிக்கின்றது.
* நிலத்தில் மழைநீர் வடிவதைத் தடுக்கிறது.
* இதனால் செடி, கொடி, மரம், பயிர் விளைவது தடுக்கப்படுகிறது.

தீர்வுகள்:-

* மக்கும் தன்மையுடைய பைகளை பயன்படுத்த வேண்டும்.
* மறுசுழற்சி செய்யக்கூடிய பொருளைப் பயன்படுத்த வேண்டும்.
* நெகிழியை தடை செய்ய வேண்டும்.

"நெகிழியைத் தவிர்த்து தலைமுறையைக் காப்போம்"

46. அ. 'பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட சமூகப் பற்று, மொழிப் பற்று ஆகியவற்றை விளக்குக.

முன்னுரை:-

மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் அவரது மொழிப்பற்றும், சமூகப்பற்றும் நிறைந்து காணப்படுகிறது. அவற்றைப் பற்றி இங்கு காண்போம்.

Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மொழிப்பற்று:-

* தமிழை வளர்ப்பதையே எப்போதும் கடமையாகக் கொள்ள வேண்டும்
* தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தோன்ற வேண்டும்.
* தமிழில் "புதியன புகுதல் வேண்டும்".

சமூகப்பற்று:-

* அனைத்து துறைகளிலும் உயர வேண்டும்.
* ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்று கொள்ள வேண்டும்.
* பெண்ணைத் தாழ்த்துபவர்கள் தன் கண்ணைத்தானே குத்திக் கொண்டதற்குச் சமம்.

முடிவுரை:-

பாரதி எழுதிய கடிதங்கள் அனைத்தும் நம்முடன் பேசுவது போல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு. பாரதியின் கடிதங்களின் மூலம் அவரின் மொழிப்பற்றையும், சமூகப்பற்றையும் புரிந்து கொள்ள முடிகிறது.

Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி - V

47.

அ.) **தெய்வமணி மாலை**

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்.

- இராமலிங்க அடிகள்.

---

**திருக்குறள்.**

ஆ.)

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

-திருவள்ளுவர்.

Scanned with OKEN Scanner
Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com